**தலைப்பு - 149 கைத்தொழில் அமைச்சு**

----------------------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு - 149 கைத்தொழில் அமைச்சின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் கைத்தொழில் அமைச்சின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2023 மே 31 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் அமைச்சிற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2023 ஒக்டோபர் 17 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கைத்தொழில் அமைச்சின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் அமைச்சால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு அமைச்சின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்களுடன் நேரொத்ததாக உள்ளது எனவும்,

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் வழங்கப்பட்ட பரிந்துரையில் இந்த அறிக்கையின் நிதிக் கூற்றுக்கள் தொடர்பான கருத்துரையின் (ஈ) (v), (vi), (vii) பந்திகளில் காண்பிக்கப்படுகின்ற அவதானிப்புக்கள் தவிர முன்னைய ஆண்டின் போது என்னால் வழங்கப்பட்டிருந்த பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருந்தது.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

**(அ) வருமானம் அல்லாத பெறுவனவுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | 2022 திசெம்பர் 13 ஆம் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 2022/05 இன் 3.1 ஆம் பந்தியின் பிரகாரம் CIGAS தொடர்பின் மூலம் தயாரிக்கப்பட்ட பரீட்சை மீதியில் எந்தவொரு வேறுபாடுகளும் இன்றி பயன்படுத்தி நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டியமை காண்பிக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் அமைச்சின் CIGAS இனை ஈடுபடுத்துவதன் மூலம் பெறப்பட்ட பரீட்சை மீதியின் பிரகாரம் திறைசேரி கட்டுநிதி பெறுவனவுகள் | நிதி செயலாற்றல் கூற்றில் திறைசேரி கட்டுநிதி பெறுவனவாக ரூபா 2,972,105,784 ஆக ACA 3 படிவத்தின் அடிப்படையாகக் கொண்டு காண்பிக்கப்பட்டிருந்தது. அப் பெறுமதி 2022 ஆம் ஆண்டிற்காக நேரடியாக அமைச்சிற்கு கிடைத்த கட்டுநிதி மற்றும் ஆண்டின் முதல் 09 மாதங்களில் அமைச்சின் கீழ் காணப்பட்ட இராஜாங்க அமைச்சுக்களுக்கு நேரடியாக கிடைத்த கட்டுநிதியை அடிப்படையாகக் கொண்டே தயாரிக்கப்பட்டிருந்தது. அவ்வாறே உரிய பரீட்சை | அரச கணக்குகள் வழிகாட்டியின் பிரகாரம் கணக்குகள் தயாரிக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ரூபா 2,063,733,470 ஆக இருந்த போதிலும் நிதி செயலாற்றல் கூற்றில் அது ரூபா 2,972,105,784 ஆக காண்பிக்கப்பட்டதன் காரணமாக திறைசேரி கட்டுநிதி பெறுவனவுகள் ரூபா 908,372,314 இனால் அதிகரித்தமை இராஜாங்க அமைச்சுக்களின் கட்டுநிதி பெறுவனவாக ரூபா 908,372,314 குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அது திறைசேரி அச்சிடல் குறிப்புக்களில் உள்ளடக்கப்பட்டிருக்க வில்லை. | மீதியில் இராஜாங்க அமைச்சிற்கு வழங்கப்பட்ட கட்டுநிதி மீதியும் தனித்தனியாக காண்பிக்க வேண்டியிருந்தமையினால் இந்த அமைச்சின் பரீட்சை மீதியில் அவ்வாறே இராஜாங்க அமைச்சுக்களுக்கு வழங்கப்பட்ட கட்டுநிதி மீதியில் காண்பிக்கப்படாதிருந்தமை பிரச்சினையாக இருந்தமையால் தொடர்ந்தும் வெளிப்படுத்தப்பட்டிருந்தது. | |
| (ii) | ஏனைய மூலங்களிலிருந்து கட்டுநிதி பெறுவனவாக திறைசேரி கட்டுநிதி தவிர முற்பணம் பீ கணக்கிற்கு காசாக மேற்கொள்ளப்பட்ட தீர்த்து வைத்தல்கள் கணக்கீடு செய்யப்பட்டமை, வைப்புப் பெறுவனவுகள் மற்றும் ஏனைய பெறுவனவுகள் ஆண்டின் பெறுவனவாகும். அதன் பிரகாரம் பெறுனவுகள் நிதிச் செயலாற்றல் கூற்றில் வைப்பு மற்றும் முற்பணக் கணக்காக வருமானம் அல்லாத பெறுவனவாக உள்ளடக்கப்பட்டிருக்கும் போது மீண்டும் ஏனைய பிரதான பேரேட்டுக் கணக்கில் பெறுவனவாக ரூபா 90,105,029 காண்பிக்கப்பட்டதன் காரணமாக வருமானம் அல்லாத பெறுவனவுகள் ரூபா 90,105,029 அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | ACA 3 படிவத்தின் பிரகாரம் திறைசேரியிலிருந்து கிடைத்த கட்டுநிதிப் பெறுமதி ரூபா 2,972,105,784 இற்கு மேலதிகமாக ஏனைய மூலங்களிலிருந்து கிடைத்த பெறுமதியும் உள்ளடக்கிய நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதன் பிரகாரம் அமைச்சினதும், அதன் கீழுள்ள 03 இராஜாங்க அமைச்சுக்களுக்குரிய ஏனைய மூலங்களின் பெறுவனவுகளை உள்ளடக்கி ரூபா 90,105,029 தொகை உள்ளடக்கப்பட்டிருந்தது. | அரச கணக்குகள் வழிகாட்டியின் பிரகாரம் கணக்குகள் தயாரிக்கப்படல் வேண்டும். |

**(ஆ) காசுப்பாய்ச்சல் கூற்று**

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | CIGAS இனை பயன்படுத்துவதன் மூலம் பெறப்பட்ட பரீட்சை மீதியின் படி இராஜாங்க அமைச்சுக்களின் செலவினங்கள் மிகைக் கட்டணமாக காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் ரூபா 591,034,918 ஆன மிகைக் கட்டணம், காசுப்பாய்ச்சல் கூற்றில் செயற்பாட்டு நடவடிக்கைகளில் இருந்து உருவான காசுப்பாய்ச்சலில் உள்ளடக்கப்பட்டிருக்க வில்லை. | உங்களின் அவதானிப்புகளில் குறிப்பிடப்பட்ட ரூபா 591,034,918 பெறுமதிக்கு இணங்குதல் தொடர்பாக புரிந்துணர்வொன்று காணப்படவில்லை. எனினும் பொதுக் கணக்கீட்டு தத்துவங்களின் பிரகாரம் காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிப்பதற்காக உரிய கால வீச்சில் நிறுவனத்திற்கு பணமாகக் கிடைத்த பெறுவனவுகள் மற்றும் பணமாக மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகளின் பெறுமதியே அடிப்படையாகக் கொள்ளப்படல் வேண்டும். எனினும் உங்களின் கணக்காய்வு ஐயவினாவில் காண்பிக்கப்பட்டுள்ள பிரகாரம் இந்த அமைச்சின் கீழ் காணப்பட்ட இராஜாங்க அமைச்சுக்களின் செலவினங்களைக் கையேற்பதற்காக மிகைக் கட்டணமாக செலவிடப்பட்ட ரூபா 591,034,918 தொகையும், செயற்பாட்டு நடவடிக்கைகளில் இருந்து உருவான காசுப்பாய்ச்சலாக உள்ளடக்கப்பட்டமை ஏற்றுக்கொள்ள முடியாத நிலைமையாக இருந்தது. | ஒன்றிணைந்த பரீட்சை மீதியில் மிகைக் கட்டணமாக சீராக்கப்பட்ட பெறுமதி காசுப்பாய்ச்சல் கூற்றில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | ஒன்றிணைந்த பரீட்சை மீதியில் ஏனைய செலவினத் தலைப்புக்களுக்காக ஏற்பட்ட செலவினம் ரூபா 613,145,309 ஆக இருந்த போதிலும் காசுப்பாய்ச்சல் கூற்றில் அது ரூபா 30,824,479 ஆக காண்பிக்கப்பட்டதன் காரணமாக செயற்பாட்டு | உங்களின் அவதானிப்பில் குறிப்பிடப்பட்ட ரூபா 613,145,309 பெறுமதியில் இணங்குதல் தொடர்பாகவும் புரிந்துணர்வு காணப்படவில்லை. எனினும் செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவான காசுப்பாய்ச்சல்களில் கணிப்பிடப்படுகின்றமையால் பரீட்சையில் மீதியில் 149 | ஏனைய செலவினத் தலைப்புக்களுக்காக ஏற்பட்ட செலவினம் சரியாக காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நடவடிக்கைகளுக்காக செலவிடப்பட்ட காசுப்பாய்ச்சல் ரூபா 582,320,830 குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | செலவினத் தலைப்பு தவிர ஏனைய சகல செலவின தலைப்புக்களினதும் மீண்டெழும் செலவினத்தில் கொடுப்பனவுகள் ரூபா 594,639,603 பெறுமதியில் பெறுவனவு மற்றும் ரூபா 563,815,124 தொகை குறைக்கப்பட்டதன் பின்னர் இணங்கப்பட்ட தேறிய பெறுமதியான ரூபா 30,824,479 பெறுமதி காசுப்பாய்ச்சல் கூற்றில் ஏனைய செலவினத் தலைப்புக்களுக்காக செலவிடப்பட்ட செலவினமாக வகைப்படுத்தப்பட்டிருந்தது. மேலும் மூலதனச் செலவின முதலீட்டு செயற்பாடுகளில் இருந்து உருவான காசுப்பாய்ச்சல் என்ற தொகுதியின் கீழ் ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு முறைமைகளின் பிரகாரம் கோவையிடப்பட்டுள்ளது. | |
| (iii) | பௌதீக சொத்துக்களின் நிர்மாணம் அல்லது கொள்வனவு செய்தல் மற்றும் ஏனைய முதலீடுகளைக் கைப்பற்றுவதற்காக ஏனைய தலைப்பாக ரூபா 8,714,088 மறைப் பெறுமதியொன்று முதலீட்டுச் செயற்பாடுகளுக்காக செலவிடப்பட்ட காசுப்பாய்ச்சலின் கீழ் காசுப்பாய்ச்சல் கூற்றில் உள்ளடக்கப்பட்டிருந்தது. | 149 செலவித் தலைப்பு தவிர ஏனைய சகல செலவினத் தலைப்புக்களிலும் மீண்டெழும் செலவின மீதியில் தேறிய பெறுமதி செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவான காசுப்பாய்ச்சலைக் கணிப்பிடுவதற்காக ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன் 149 செலவினத் தலைப்பு தவிர ஏனைய சகல செலவினத் தலைப்புக்களிலும் மூலதனச் செலவினத்தின் கொடுப்பனவு ரூபா 21,530,626 தொகையில் பெறுவனவு ரூபா 30,244,713 குறைக்கப்பட்டதன் பின்னர் இணங்கப்பட்ட தேறிய பெறுமதியான ரூபா 8,714,087 பெறுமதி கழிவுப் பொருள் பெறுமதியாக இருந்தமையால் முதலீட்டு செயற்பாடுகளிலிருந்து உருவான காசுப்பாய்ச்சலின் கீழ் காண்பிக்கப்பட்டுள்ளதுடன் பெறுமதியாக அது கழிவு மீதியாக | பௌதீக சொத்துக்களை கைப்பெற்றுதலின் பெறுமதி கழிவுப் பெறுமதியாக ஏற்றுக்கொள்ள முடியாத நிலைமையாக இருந்ததுடன் சரியான பெறுமதியை உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | காண்பிக்கப்பட்டமையால் 149 செலவினத் தலைப்பிற்குரிய தொகையிலிருந்து செலவிடப்பட்ட சகல மூலதனச் செலவினங்களினதும் பெறுமதிகள் குறைவாக (பௌதீக சொத்துக்கள் நிர்மாணம் அல்லது கொள்வனவு செய்தல் மற்றும் ஏனைய முதலீடுகளை கைப்பற்றுதல்) அடைப்புக்குறிக்குள் காண்பிக்கப்பட்டுள்ளது. | |

**(இ) கட்டுநிதி இணக்கக்கூற்றின் மீதி**

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (i) அறிக்கையின் 1.6.1 (அ)(i) மற்றும் (ii) பந்தியின் பிரகாரம் வருமானம் அல்லாத பெறுவனவுகள் ரூபா 998,477,343 அதிகரித்தும், 1.6.1 (ஆ)(ii) பந்தியின் பிரகாரம் ஏனைய தலைப்புக்களுக்காக ஏற்பட்ட செலவினம் ரூபா 582,320,830 குறைத்தும் காண்பிக்கப்பட்டதன் காரணமாக கட்டுநிதி இணக்கக்கூற்றில் கூட்டல்களில் பெறுமதி ரூபா 416,156,513 தொகை அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | உங்களின் கணக்காய்வு அவதானிப்பில் இந்த விடயங்களினால் வேறுபாட்டுக்கு எடுக்கப்பட்ட விடயங்கள் அவதானிக்கப்பட்டிருந்த போதிலும் மேற்கூறப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்களுக்குரியதாக வழங்கப்பட்ட பதிலின் பிரகாரம் உரிய தரவுகளை அடிப்படையாகக் கொண்டு நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருந்தது. நிதி செயலாற்று கூற்று தயாரிக்கும் போது இந்த பெறுமதி ஈடுபடுத்தப்பட்டமையினால் கட்டு நிதி இணக்கக்கூற்றில் உரிய இணக்கங்களைச் செய்யும் போது இப் பெறுமதி வேறுபடுவதற்கான காரணத்தை சீராக்குவதற்காக ஈடுபடுத்தப்பட்டுள்ளது. மேற்கூறப்பட்ட அவதானிப்புக்களுக்காக தெளிவான முறையில் தயாரிக்கப்பட்ட நிதிக்கூற்றிக்களின் தரவுகளை அடிப்படையாகக் கொண்டு கட்டுநிதி இணக்கக்கூற்று தயாரித்து அதன் | அரசாங்க கணக்குகள் வழிகாட்டியின் பிரகாரம் கணக்குகள் தயாரிக்கப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | கூட்டுப்பெறுமதி ரூபா 1,123,954,657 பெறுமதியில் உடன்பட்டிருந்தது. | |
| (ii) அறிக்கையின் 1.6.1 (ஆ) (i) பந்தியின் பிரகாரம் ரூபா 591,034,918 ஆன இராஜாங்க அமைச்சுக்களின் செலவினங்கள் மிகைக் கட்டணமாக கணிப்பிடப்பட்டு கட்டுநிதி இணக்கக்கூற்றில் காண்பிக்கப்படாமையின் காரணமாகவும், 1.6.1 (ஆ)(iii) பந்தியின் பிரகாரம் பௌதீக சொத்துக்களை நிர்மாணித்தல் அல்லது கொள்வனவு செய்தல் மற்றும் முதலீடுகளைக் கைப்பற்றுதல் ரூபா 8,714,088 ஏனைய தலைப்புக்களின் செலவினமாகவும், ஆடைகள் இராஜாங்க அமைச்சின் செலவினம் மூலம் தீர்க்கப்பட்ட உப கட்டுநிதியாக ரூபா 125,000 கட்டுநிதி இணக்கக்கூற்றில் கழித்தலின் கீழ் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டதன் காரணமாக கட்டுநிதி இணக்கக்கூற்றில் குறைத்தல்களின் பெறுமதி ரூபா 582,195,830 குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | மேற்கூறப்பட்ட அவதானிப்புக்களுக்குரிய பதில்களில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள பிரகாரம் உங்களின் கணக்காய்வு அவதானிப்புக்களுக்காக அடிப்டையாகக் கொள்ளப்பட்ட பெறுமதி மற்றும் எமது கட்டுநிதி இணக்கக்கூற்றுக்காக ஈடுபடுத்தப்பட்ட பெறுமதி வேறுபடுகின்றமையால் கட்டுநிதி இணக்கக்கூற்றில் கழித்தல் பெறுமதி மாற்றமடைய வேண்டும். அதன் பிரகாரம் எமது கழிக்கப்பட்ட பெறுமதியில் கூட்டப்பட்ட பெறுமதி 1,410,219,308 ஆக சரியான பெறுமதியை வெளிப்படுத்துகின்றது. | அரசாங்க கணக்குகள் வழிகாட்டியின் பிரகாரம் சரியாக கணக்குகள் தயாரிக்கப்படல் வேண்டும். |

**(ஈ) ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (i) 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதியல்லாச் சொத்துக்கள் தொடர்பான கூற்றின் பிரகாரம் (ACA 6 படிவத்தில்) போக்குவரத்து | 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு போக்குவரத்து உபகரணங்கள் மற்றும் ஏனைய இயந்திரம் மற்றும் உபகரணங்களின் மீதியும் | ஆரம்ப மீதிகளில் வேறுபாட்டிற்குக் காரணங்கள் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படல் |

| | | | |
|---|---|---|---|
| | உபகரணங்கள் மற்றும் ஏனைய இயந்திரம் மற்றும் உபகரணங்களின் பெறுமதி முறையே ரூபா 483,123,759 மற்றும் ரூபா 94,651,338 ஆக இருந்ததுடன் 2022 சனவரி 01 இல் உள்ளவாறு அவற்றின் ஆரம்ப மீதி பெறுமதி முறையே ரூபா 820,215,340 மற்றும் ரூபா 244,512,882 ஆனமையால் ரூபா 486,953,125 வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | முறையே ரூபா 483,123,759 மற்றும் ரூபா 94,651,338 ஆக தலைப்பு இலக்கம் 149 இன் கீழ் அமைச்சரவை அமைச்சுடன் தனியாக அமுல்படுத்துவதற்கு காணப்பட்ட மீதியாக இருந்ததுடன் இராஜாங்க அமைச்சு இந்த அமைச்சுடன் ஒன்றிணைவதற்குரிய நிதியல்லாச் சொத்துக்கள் 2022 ஒக்டோபர் 01 இல் உள்ளவாறு கையளிப்பதற்குரிய காலம் 2022 ஆம் ஆண்டில் ஆரம்ப மீதியாக அறிக்கையிடப் பட்டமையினால் இந்த வேறுபாடு ஏற்பட்டிருந்தது. இதில் ஏற்பட்டிருந்த வழுக்கள் தொடர்பாக எதிர்காலத்தில் திறைசேரியின் அரச கணக்குகள் திணைக்களத்துடன் கலந்துரையாடி உரிய சரிசெய்தல்கள் மேற்கொள்ளப்படும். | வேண்டும். |
| (ii) | 2022 ஆம் ஆண்டில் நிதிக்கூற்றுக்களில் சமர்ப்பிக்கப்பட்ட ACA 6 படிவத்தில் உள்ளடக்கப்பட்ட அகற்றுதல்களாக காண்பிக்கப்பட்ட ரூபா 80,430,000 ஆன போக்குவரத்து உபகரணங்கள் மற்றும் ரூபா 1,648,500 ஆன ஏனைய இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களின் பெறுமதி மற்றும் ஏனைய மீதிகளில் கூட்டல்களாக காண்பிக்கப்பட்ட ரூபா 407,702 ஆன ஏனைய இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களின் பெறுமதி மற்றும் மாற்றல்களாக காண்பிக்கப்பட்ட ரூபா 1,084,688 ஆன ஏனைய இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் தொடர்பான பெறுமதி கணக்கீட்டு வழுக்களாக இருந்த போதும் அவற்றை நிதிக் | **போக்குவரத்து உபகரணங்கள் கைதவிர்த்தல் - ரூபா 80,430,000**<br><br>இந் அமைச்சின் கீழ் காணப்பட்ட புடவை கை இயந்திரம் துணிகள் மற்றும் உள்நாட்டு புடவை உற்பத்தி இராஜாங்க அமைச்சின் தலைப்பு இலக்கம் 439 இல் காணப்பட்ட போக்குவரத்து உபகரணங்களின் கீழான 12 மோட்டார் வாகனங்கள் உரிய இராஜாங்க அமைச்சு கலைக்கப்பட்டு அவற்றில் நிதிக் கூற்றுக்கள் அல்லாத சொத்துக்கள் இந்த அமைச்சிற்கு கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. அவ்வாறு நடவடிக்கை எடுக்கும் போது உரிய இராஜாங்க அமைச்சின் சொத்துக்களை கையளிப்பதற்கு நாட்குறிப்பு பதிவுகள் CIGAS கணனி முறைமையில் பதிவிடும் போது இந்த சொத்துக்கள் | நிதிக் கூற்றுக்களில் தேவையான சரிசெய்தல்களை மேற்கொள்வதற்கும் மற்றும் வெளிப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கூற்றுக்களில் சரி செய்வதற்கோ அல்லது வெளிப்படுத்துவதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | அகற்றல்களின் கீழ் அறிக்கையிடப்பட்ட போதும் சொத்துக்களில் அகற்றப்படாதிருந்தமையை அறியத் தருகின்றோம். இது ஏற்பட்டிருந்த வழுக்கள் தொடர்பாக எதிர்காலத்தில் திறைசேரியின் அரச கணக்குகள் திணைக்களத்துடன் கலந்துரையாடி உரிய சரிசெய்தல்களை மேற்கொள்ளப்படும் எனவும் அறியத்தருகின்றோம்.<br><br>**ஏனைய இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் - கைதவிர்த்தல் ரூபா 1,648,500**<br><br>கணனி நிகழ்ச்சித் திட்டத்தில் தவறுதலாக உள்ளடக்கப்பட்டுள்ள பதிவாக இருந்ததுடன் அது எதிர்காலத்தில் உரிய பிரகாரம் சீராக்கி சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென அறியத்தருகின்றோம்.<br><br>**ஆரம்ப மீதியில் சேர்த்தல்கள் ரூபா 407,702**<br><br>இந்தத் தொகை ரூபா 407,702 ஆகக் காண்பிக்கப்பட்ட போதிலும் அப்பெறுமதி முன்னாள் காணப்பட்ட 03 இராஜாங்க அமைச்சிக்களுக்குரிய ரூபா 495,706 மாத்திரம் ஆகும். | |
| (iii) | நிதிக் கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்ட ACA 6 படிவத்தில் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பிரயாணிகள் வாகனங்களின் பெறுமதி ரூபா 703,322,021 ஆக இருந்த போதிலும் வாகனங்கள் தொடர்பான பதிவேட்டில் அப் பெறுமதி ரூபா 743,887,021 ஆனமையால் வேறுபாடு | இந்த அமைச்சிற்குச் சொந்தமான வாகன அணியில் முன்னாள் காணப்பட்ட இராஜாங்க அமைச்சிற்கு தனித்தனியாக பேணிச் செல்லப்பட்ட நிதியல்லாச் சொத்துக்கள் உரிய CIGAS கணனி நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் இந்த அமைச்சிற்கு கையளிப்பதற்கு உரிய பதிவுகளை இடும் போது எந்தவொரு வேறுபாடும் | நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட நிதியல்லாச் சொத்துக்களின் மீதிகள் உரிய பதிவேடுகளுடன் இணக்கம் செய்து சீராக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ரூபா 40,565,000 ஆகும். | ஏற்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டதுடன் இது நிதியல்லாச் சொத்துக்களின் மீதி தேவையான கணக்குகள் சீராக்கம் செய்வதற்கு விரைவாக நடவடிக்கை எடுக்கப்படுமென அறியத்தருகின்றோம். | |
| (iv) | 2022 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் கைதவிர்க்கப்பட்ட ரூபா 3,025,000 ஆன 02 வாகனங்களின் பெறுமதி சமர்ப்பிக்கப்பட்ட வாகனப் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டிருந்தது. | உங்களால் கணக்காய்வில் அவதானிப்பில் சுட்டிக்காட்டப்பட்டதன் பிரகாரம் தவறுதலாக உரிய அகற்றப்பட்ட வாகனங்கள் தொடர்ந்தும் நிதியல்லா சொத்துக்களின் கீழ் காண்பிக்கப்படுகின்றது. இந்தப் பெறுமதியை விரைவாக சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென அறியத்தருகின்றோம். | உரிய பதிவேடுகளை சரியாக நாளதுவரையாக பேணிச் செல்லல் வேண்டும். |
| (v) | நிதி அமைச்சு மற்றும் தென் மாகாண விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சுக்கு கையளிக்கப்பட்ட ரூபா 13,200,000 பெறுமதியான 02 வானங்கள் கைத்தொழில் அமைச்சின் சொத்துக் கணக்குகளில் இருந்து அகற்றப்பட்டிருக்க வில்லை. | ஒரு வாகனம் தென் மாகாண விளையாட்டுத் துறை மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சுக்கு கையளித்தல் உறுதிப்படுத்தப்பட்ட கடிதம் உள்ளது. அதன் பிரகாரம் கணக்குகளில் இருந்து அகற்ற முடியும். ஏனைய வாகனத்தின் பதிவுச் சான்றிதழ் வர்த்தக அமைச்சுக்கு கையளிக்கப்பட்டுள்ளது. வாகனம் அந்த அமைச்சிலிருருந்து எடுத்துச் செல்வதற்கு முன்னர் வாகனம் நிதி அமைச்சுக்கு வழங்குமாறு கொம்ட்றோலர் ஜெனரல் இற்கு மேற்கொள்ளப்பட்ட அறிவித்தலின் பிரகாரம் வாகனம் நிதி அமைச்சுக்கு கையளிக்கப்பட்டிருந்தது. பதிவுச் சான்றிதழ் வர்த்தக அமைச்சிலிருந்து பெற்றுக் கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டிருந்தது. அந்த வாகனத்தை கையேற்றல் தொடர்பாக இதுவரை | அமைச்சுக்கு சொந்தமில்லாத சொத்துக்கள் நிதிக் கூற்றுக்களிலிருந்து அகற்றப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | தேவையான தகவல்கள் நிதியமைச்சிலிருந்து கிடைத்திருக்க வில்லை. கையேற்றல் தொடர்பான தகவல்கள் நிதி அமைச்சிலிருந்து உறுதிப்படுத்தியதன் பின்னர் கணக்குகளிலிருந்து அகற்ற முடியும். | |
| (vi) | பல்வேறு அமைச்சுக்களிலிருந்து ரூபா 4,800,000 பெறுமதியான 03 வாகனங்கள் கைத்தொழில் அமைச்சுக்கு பெற்றிருந்ததுடன் 2022 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் அந்த வாகனங்களின் பதிவு அமைச்சிலிருந்து நீக்கப்பட்டிருந்தது. இந்த வாகனங்கள் அமைச்சினால் பயன்படுத்தப்பட்ட போதும் அதன் பெறுமதி கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | ஒரு வாகனம் சதொச நிறுவனத்திற்கு ஏனைய அமைச்சிலிருந்து வழங்கப்பட்டிருந்ததுடன் சில வருடங்களாக ஓட்டத்தில் ஈடுபடாத நிலைமையில் காணப்பட்டமையால் விற்றுத் தீர்ப்பதற்காக அந்த அமைச்சுக்கு எடுத்துச் செல்லப்பட்டிருந்தது. இதன் பதிவுச் சான்றிதழ் காணப்படவில்லை. பின்னர் பெருந்தோட்ட கைத் தொழில் அமைச்சில் மேற்கொண்ட கோரிக்கையின் படி மேலும் சில வாகனங்களுடன் இந்த வாகனம் வழங்கப்பட்டிருந்ததுடன் கையளிப்பதற்காக கையளித்தல் பத்திரத்தை சமர்ப்பிக்குமாறு அறிவிக்கப்பட்ட போதிலும் இதுவரை அந்த ஆவனங்கள் சமர்ப்பிக்கப்படவில்லை. இந்த விடயங்களின் காரணமாக மேற்கூறப்பட்ட வாகனனங்கள் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.<br><br>ஏனைய 02 வாகனங்கள் இந்த அமைச்சின் விடயப்பரப்பின் கீழ் உள்ள பரந்தன் கெமிக்கல்ஸ் நிறுவனத்தின் கடமைகளுக்காக தற்காலிக அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளது. அமைச்சின் பெயரில் பதிவு இல்லாதிருந்தமையின் காரணமாக கணக்கீடு செய்யப்படாதிருந்துடன் அந்த வாகனங்களை கையேற்ற | விரைவாக கையேற்பதற்கு நடவடிக்கை எடுத்து நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்துதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | பின்னர் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (vii) | அமைச்சினால் செலவினம் செய்து நிர்மாணிக்கப்பட்ட கட்டிடத்தின் பெறுமதி அதன் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்த வேண்டியிருந்த போதிலும் கைத்தொழில் அபிவிருத்திப் பிரிவிற்கு கிடைத்த தகவல்களின் பிரகாரம் 1996 ஆம் ஆண்டிலிருந்து 16 கைத்தொழில்பேட்டை நிர்மானங்களில் 13 நிர்வாக கட்டிடங்கள், 03 தொழிற்சாலைகள் மற்றும் அலுவலகம் வீடு/ சேவைக்கட்டிடங்கள் 02 என்பவற்றின் பெறுமதியான ரூபா 456.98 மில்லியன் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கணக்கீடு செய்யப்பட்டிருக்க வில்லை. | இந்த சகல நிர்வாகக் கட்டிடங்கள், உரிய மாகாண பிரதேச பணிப்பாளர்களின் மேற்பார்வையின் கீழ் பயன்படுத்தப்படுகிறது. இந்த சொத்துக்களை கணக்கீடு செய்தல் தொடர்பாக திறைசேரியின் அரச கணக்குகள் திணைக்களத்துடன் கலந்துரையாடப்பட்டுள்ளதுடன் அதிலிருந்து கிடைக்கின்ற ஆலோசனையின்படி உரிய உத்தியோகத்தர்களால் ஒவ்வொரு சொத்து தொகுதியின் கீழ் தனித்தனியாக இணங்காணப்பட்டுள்ளதுடன் 2023 ஆம் ஆண்டின் போது அந்த சொத்துக்களை அமைச்சின் நிதியல்லா சொத்துக்களாக கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | மூலதன செலவினங்கள் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்படல் வேண்டும். |

**(உ) அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பண பீ கணக்கு**

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மரணமடைந்த இரண்டு உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடவேண்டிய ரூபா 198,397 ஆன கடன் மீதியும், வேலைநீக்கத்துக்கு உட்பட்ட ஒரு உத்தியோகத்தரிடமிருந்து அறவிடவேண்டிய ரூபா 100,208 ஆன கடன் மீதியும் , சேவையை விட்டுச் சென்ற மூன்று உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடவேண்டியப 273,029 ஆன கடன் மீதியும் ஆக கூட்டு மொத்தமாக ரூபா 571,634 தொகை 01 வருடம் முதல் 05 வருடங்கள் வரையிலான கால வீச்சிலிருந்து அறவிடப்படாமல் காணப்பட்டது. | மரணமடைந்த இரண்டு உத்தியோக்கர்களுமிருந்து அறவிடவேண்டிய கடன் மீதியை ஊழியர் மரணப் பணிக் கொடையிலிருந்து அறவிடுவதற்கு ஓய்வூதியத் திணைக்களத்திற்கு இணையவழி ஊடாக விண்ணப்பித்து தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. வேலை நீக்கத்திற்கு உட்பட்ட உத்தியோகத்தரிடமிருந்து அறவிடவேண்டிய ரூபா 100,208 தொகை அறவிடுவதற்காக கோட்டை நீதவான் | கடன் மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டுள்ளதுடன் சேவையை விட்டுச் சென்ற இரண்டு உத்தியோகத்தர்களிடமிருந்து தவணைப்பணமாக கடனை அறவிடுதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. | |

**(ஊ) வைப்புக் கணக்கு மீதிகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (i) 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அமைச்சுக்கு சொந்தமான மூன்றாம் தரப்பினருக்கு மீண்டும் செலுத்துவதற்காக தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்ட வைப்புக் கணக்கின் மீதி ரூபா 20,279,073 ஆகும். | 10 வருடங்களுக்கு மேற்பட்ட காலத்திலிருந்து காணப்படுகின்ற மூன்றாம் தரப்பினருக்கு மீண்டும் செலுத்துவதற்காக தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்ட வைப்பாகும். அந்த வைப்புப் பணம் கைத்தொழிலாளர்களுக்காக காணி கூறுகளை ஒதுக்குவதற்காக வைப்புச் செய்யப்பட்டிருந்ததுடன் அந்த கருமாந்தபுர மேற்கொள்ளப்படுகின்ற செயற்றிட்ட நடவடிக்கைகளுக்காக அந்த காணி அரசாங்கத்துக்கு கையேற்றல் மற்றும் முதலீடுகளுக்கு ஒதுக்குதல் காணி அமைச்சு, காணி மறுசீரமைப்பு ஆணைக்குழு , பிரதேச செயலகம் என்ற அரச நிறுவனங்களின் ஒன்றிணைந்து மேற்கொள்ளப்படுகின்ற நடவடிக்கையாக இருந்தமையினால் அதற்காக சில காலம் எடுக்கின்றது. எனினும் எதிர்காலத்தில் அமைச்சு செயலாளர் மற்றும் ஏனைய திணைக்களத் தலைவர்களின் நேரடியான பங்களிப்பின் அடிப்படையில் உரிய நடவடிக்கைகளை விரைவுபடுத்துவதற்காக நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. அதன் பிரகாரம் எதிர்காலத்தில் | வைப்பு மீதிகளை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | இந்த வைப்பு மீதிகளை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்க முடியும். | |
| (ii) | 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அமைச்சுக்கு சொந்தமான ஒப்பந்தக்களுக்காக நிறுத்தி வைத்தல் பணம் வைப்புக் கணக்கின் மீதி ரூபா 38,291,283 ஆகும். | கடந்த காலங்களில் நாட்டில் காணப்பட்ட சிக்கலான பொருளாதார நிலைமையில் எரிபொருள் விலை உயர்வடைந்தமையால், நிர்மானப் பொருட்கள் பற்றாக் குறை மற்றும் அரசாங்கத்தின் நிலுவை பட்டியல்கள் செலுத்துவதில் தாமதம் ஏற்றபட்டமை போன்றவையின் காரணமாக ஒப்பந்த நடவடிக்கைகள் உரிய பிரகாரம் நிறைவேற்றுவதற்கு முடியாமையால் நிறுத்தி வைக்கப்பட்ட வைப்புக்களை விடுவிப்பதற்கு நடவடிக்கைகள் கைவிடப்பட்டிருந்தது. | உரிய பணிகள் பூர்த்தி செய்யப்பட்ட பின்னர் நிறுத்தி வைக்கப்பட்ட வைப்புக்களை விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 66 செலவின விடயங்களுக்குரியதாக வழங்கப்பட்ட ரூபா 471,095,000 ஆன தேறிய நிதி ஏற்பாட்டில் ரூபா 115,891,080 பயன்படுத்தப்பட்டு ரூபா 355,203,920 சேமிப்பொன்று காணப்பட்டதுடன் அது தேறிய நிதி ஏற்பாட்டில் 51 சதவீதத்திற்கும் 99 சதவீதத்திற்கும் இடையிலான வீச்சினைக் கொண்டிருந்தது. | கைத்தொழில் அமைச்சர் கைத்தொழில் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் என்ற அமைச்சு இரண்டினதும் அமைச்சர் பதவிகளில் ஈடுபட்டமையால் 02 அமைச்சுகளுக்கிடையே அமைச்சரினதும், பதவியணியினரதும் செலவினங்கள் பிரிந்து சென்றிருந்தது. 06 செலவின விடயங்களில் சேமிப்புக்கான காரணமாக இருந்தது.<br><br>அதற்கு மேலதிகமாக ஏனைய செலவின விடயங்களில் சேமிப்பிற்காக அரசாங்கத்தின் | சரியாக செலவின மதிப்பீடு தயாரிக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | செலவின முகாமைத்துவத்தின் கீழ் அத்தியமற்ற சகல செலவினங்களையும் வரையறுத்தல், நாட்டில் காணப்பட்ட உச்ச அளவிலான பொருளாதார நெருக்கடியின் இடையே வழங்கல்கள் வரையறுக்கப்பட்டமையால் வாகனப் பராமரிப்பு நடவடிக்கைகள் காலம் தாழ்த்த வேண்டி ஏற்பட்டிருந்தமை, நாட்டில் காணப்பட்ட பொருளாதார நெருக்கடியின் அடிப்படையில் பொதுத்துறை திறைசேரியிலிருந்து போதியளவான பிரகாரம் கட்டுநிதி கிடைக்கப்பெறாமை போன்ற விடயங்கள் காரணமாக இருந்தது. | |
| (ஆ) | 18 செலவின விடயங்களுக்குரியதாக வழங்கப்பட்ட ரூபா 100,650,000 ஆன மொத்த தேறிய நிதி ஏற்பாடும் செலவினங்கள் செய்யப்படாமல் சேமிக்கப்பட்டிருந்தது. | அரசாங்க செலவின சுற்றறிக்கையின் அடிப்படையில் செலவினங்களைக் கட்டுப்படுத்தும் அடிப்படையில் அத்திவசியமற்ற பராமரிப்பு செலவினங்களைக் கட்டுப்படுத்துதல், எதிர்பார்க்கப்பட்ட பிரகாரம் செலவினங்கள் மேற்கொள்ளப்படாமை, அரசாங்கத்தின் கொள்கையின் பிரகாரம் செலவினங்களை வரையறுத்தலின் நோக்காக புதிய கொள்வனவுகளை குறைத்தல் போன்ற விடயங்கள் இந்த விடயங்களின் மொத்த தேறிய நிதி ஏற்பாடும் சேமிப்பதற்கு காரணமாக இருந்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது. | சரியாக செலவின மதிப்பீடு தயாரிக்கப்படல் வேண்டும். |

**2.2 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளுக்கு உடன்படல்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2023 ஆம் ஆண்டின் சனவரி மற்றும் பெப்ரவரி கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்களைப் பரீட்சித்த போது 14 செலவின விடயங்களுக்குரிய ரூபா 2,726,134 ஆன பொடுப்பனவுகள் 2022 ஆம் ஆண்டிற்குரியதாக மேற்கொள்ளப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டதுடன் அப்பெறுமதி பொறுப்புக்கள் தொடர்பான கூற்றில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கொடுப்பனவு செய்வதற்கு தீர்மானிக்கப்பட்ட கட்டுநிதி கிடைக்காமையின் அடிப்படையில் கொடுப்பனவு செய்வதற்கு முடியாதிருந்த உறுதிச் சீட்டுக்களின் பெறுமதி பொறுப்புக்களாக 2022 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கும் போது சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. 2023 ஆம் ஆண்டு ஆரம்பித்ததன் பின்னர் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கும் போது அவ்வப்போது 2022 ஆம் ஆண்டிற்குரிய 2023 ஆம் ஆண்டின் கொடுப்பனவு செய்வதற்காக சமர்ப்பிக்கப்படுகின்றது உறுதிச்சீட்டுக்கள் பொறுப்பாக குறிப்பிடப்படவில்லை. அவ்வாறே இதில் அநேகமான உறுதிச்சீட்டுக்கள் 2022 ஆம் ஆண்டின் இறுதி மாதத்திற்குரிய மேலதிக நேரம், பிரயாணச் செலவினம், நீர் அல்லது மின்சாரப் பட்டியல்களாக இருந்ததுடன் பொதுவாக அந்தப் பட்டியல்கள் செலுத்துவதற்கு அடுத்துவரும் மாதத்திலேயே சமர்ப்பிக்கப்படுகின்றது.<br><br>முன்னைய ஆண்டின் பொறுப்புக்களாக குறிப்பிடப்பட்ட போதிலும் இந்த ஆண்டு ஆரம்பித்ததன் பின்னர் கொடுப்பனவுகளுக்கு பயன்படுத்துவதற்கு நடப்பாண்டின் கட்டுநிதி ஏற்பாட்டின் அடிப்படையில் மேற்கொள்ளப்படும். | பொறுப்புக்கள் தொடர்பான கூற்றில் ஆண்டிற்குரிய சகல பொறுப்புக்களும் காண்பிக்கப்படல் வேண்டும். |

**2.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களின் ஏற்பாடுகளுடன் இணங்காமை சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டு கீழே தரப்பட்டுள்ளது.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணங்காமைகள் | இணங்காமைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | |
| | நிதிப்பிரமாணம் 570 (ஆ), (இ) | ரூபா 29,941,927 பெறுமதியான 53 வைப்புக்கள் 02 வருட காலம் முதல் காணப்படுகின்றது. | கடந்த காலத்தில் நாட்டில் காணப்பட்ட சிக்கலான பொருளாதார நிலைமையில் எரிபொருள் விலை உயர்வடைந்தமை நிர்மாணப் பொருட்களின் பற்றாக்குறை மற்றும் அரசாங்கத்தின் நிலுவைப் பட்டியல்களைச் செலுத்துதல் தாமதமடைந்ததன் காரணமாக ஒப்பந்த நடவடிக்கைகள் உரிய பிரகாரம் நிறைவேற்றுவதற்கு முடியாமையால் நிறுத்திவைக்கப்பட்ட வைப்பை விடுவிக்கும் நடவடிக்கைகள் கைவிடப்பட்டிருந்தது. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2018 திசெம்பர் 31 ஆந் திகதிய கொம்ரோலர் ஜனரால் அலுவலகத்தில் இலங்கை சனநாயக சோசலிச | அரசாங்கத்திற்குச் சொந்தமான சகல வாகனங்களுக்காகவும் 05 வருடங்களுக்கு ஒரு தடவை மதிப்பீடொன்றைப் பெற்றுக் கொள்ளுதல் கட்டாயமாக இருந்ததுடன் அந்த | வாகனங்களை மதிப்பீடு செய்வதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கையின் நியதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | |
|---|---|
| குடியரசின் நிதியல்லாத சொத்துக்களின் மதிப்பீட்டு வழிகாட்டியின் 1.3.1 ஆம் பிரிவு | மதிப்பீட்டுப் பெறுமதி கணக்கீட்டு நடவடிக்கைகளுக்காக மாத்திரம் பயன்படுத்த வேண்டியிருந்தமை குறிப்பிடப்பட்ட போதிலும் அமைச்சிற்குச் சொந்தமான ரூபா 438.42 மில்லியன் பெறுமதியுடைய 65 வாகனங்கள் தொடர்பாக அவ்வாறு மதிப்பீடு செய்வதற்கு அமைச்சு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 பணிப்பொறுப்புக்கள் நிறைவேற்றப்படாமை.

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| றைகம பசுமை கைத்தொழில் மற்றும் தொழில்நுட்ப அபிவிருத்தி அதியுயர் கைத்தொழில் வலயத்தை ஸ்தாபிப்பதற்காக அதன் நிர்மாண நடவடிக்கைகளுக்காக ரூபா 97.27 மில்லியன் 2022 ஆம் ஆண்டில் திருத்தப்பட்ட மதிப்பீட்டில் ஒதுக்கப்பட்டிருந்ததுடன் அதற்காக ரூபா 48,182,982 செலவினம் செய்யப்பட்டிருந்தது.<br>மீளாய்வாண்டின் இறுதி வரையில் அதன் நிர்மாண நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் நிதிசார் செயல் முன்னேற்றம் 49 சதவீதமாக இருந்தது. மேற்கூறப்பட்ட செலவினத்தில் நீர் வழங்கல்களுக்காக ரூபா 29,570,000 செலவிடப்பட்டிருந்த போதிலும் பௌதீக செயல் முன்னேற்றம் 20 சதவீதம் மாத்திரமாக இருந்தது. | 2022 ஆம் ஆண்டில் ஒதுக்கப்பட்ட மொத்த நிதி ஏற்பாட்டை பயன்படுத்தாதிருப்பதற்கும் மற்றும் எதிர்பார்க்கப்பட்ட பௌதீக செயல் முன்னேற்றத்தை அடைவதற்கு முடியாதிருந்தமைக்கும் பின்வரும் காரணங்களினால் ஆகும்.<br><br>1. அந்த பிரதேசத்தில் பிரதேச சபையின் தலைவரின் எதிர்ப்பின் காரணமாக இந்த செயற்திட்டத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்ச்சியாக நடாத்திச் செல்வதில் பிரச்சினையான நிலைமை எழுந்தமையால் செயற் திட்டத்தின் நடவடிக்கைகள் தாமதமடைந்தமை.<br><br>2. அதன் காரணமாக பின்னர் மூலப் பொருட்களை உள்ளடக்கிய நிர்மண கிரயம் துரிதமாக அதிகரித்தமையினால் செயற்திட்டத்தின் நடவடிக்கைகளுக்கான கிரயத்தை திருத்துவதற்கு நிர்மாண ஒப்பந்த நிறுவனம் நடவடிக்கை | கைத்தொழில் பேட்டை அபிவிருத்தி நடவடிக்கைகளை விரைவாக பூர்த்தி செய்து கைத்தொழில்களை ஆரம்பிப்பதற்கு கைத்தொழிலாளர்களை தொடர்புபடுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | எடுத்திருந்ததுடன் அந்த புதிய மதிப்பீட்டிற்காக அமைச்சரவை அங்கீகாரம் பெற்றுக்கொள்ள வேண்டியிருந்த போதிலும் பிரதேச சபையின் தலைவரின் எதிர்ப்பு பிரச்சினைகளை தீர்க்கும் வரை மிகுதி நடவடிக்கைகளை நிறுத்துமாறு கௌரவ அமைச்சரால் ஆலோசனை வழங்கப்பட்டிருந்தமை. | |

**3.2 எதிர்பார்க்கப்பட்ட பூர்த்தி மட்டம் அடையப்படாமை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2022 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் 15 கைத்தொழில் பேட்டைகளுக்குரிய 66 காணிக் கூறுகள் கைத்தொழிலாளர்களுக்கு ஒதுக்கப்பட்டு வழங்கப்படாமையின் காரணமாக அந்தக் காணிகள் விளைவற்றுக் காணப்பட்டது. | அதற்குரிய காரணங்கள் பின்வருமாறு.<br><br>பூர்த்தி செய்யப்பட்ட உற்பத்தியை விற்பனை செய்வதற்கு கொழும்புக்கு எடுத்துவர வேண்டியிருந்தமையால் போக்குவரத்து நடவடிக்கைகளுக்காக அதிக செலவினத்தைச் செய்வதற்கு ஏற்பட்டமை மற்றும் கைத்தொழில் பேட்டைகளுக்குரிய காணியில் கைத்தொழிலுக்கு ஏற்ற வகையில் அபிவிருத்தி செய்யாமையின் காரணமாக மழைகாலத்தின் போது மழைநீர் நிரம்பியதன் காரணமாக மன்னார் கைத்தொழில்பேட்டையில் காணிகளில் 17 கூறுகளும் முல்லைத்தீவு மாவட்டத்தில் விடுவிடுக்கப்பட்ட இடங்களில் கைத்தொழில்பேட்டை ஸ்தாபித்ததன் காரணமாக கைத்தொழில்களை ஆரம்பிப்பதற்காக காணி கோருதல் மிகவும் குறைவடைந்தமை, சரியான குடிநீர் வசதிகள் முறைமையொன்று கைத்தொழில்பேட்டையில் அமைத்து பிரதேசத்திற்கு வழங்காமையின் காரணமாக கைத்தொழிலாளர்கள் முதலீட்டுக்காக முன்வராமையின் காரணமாக வெளிஓய கைத்தொழில்பேட்டையில் காணிகளில் 5 கூறுகள் முறையான நுழைவு வசதிகள் காணப்படாமையின் காரணமாக | பொருத்தமான முதலீட்டாளர்களைத் தெரிவு செய்து காணியினை வழங்கி கைத்தொழிலை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | முதலீட்டாளர்களுக்கு காணி வழங்குவதற்கு வசதியீனமாக இருந்தமை, செயலிழந்தமையின் காரணமாக கைத்தொழில்களை இரத்துச் செய்வதற்கு வேண்டி ஏற்பட்டமை, அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைத்த போதும் கைத்தொழில்களை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்காமையின் காரணமாக கைத்தொழில்களை இரத்துச் செய்வதற்கு ஏற்பட்ட விடயங்களின் காரணமாக 13 கைத்தொழில் பேட்டைகளில் காணிகள் வெற்றிடமாகக் காணப்பட்டது. | |
| (ஆ) | புத்தள கைத்தொழில் பேட்டையில் 43 காணிக் கூறுகள் ஒதுக்கப்பட்டிருந்ததுடன் 2016 ஆம் ஆண்டு முதல் 2021 வரை 15 கைத்தொழிலாளர்களுக்கும், 2022 ஆம் ஆண்டின் போது மேலுதம் இரண்டு கைத்தொழிலாளர்களுக்கும் 41 காணிக் கூறுக்கள் வழங்கப்பட்டிருந்தது. அதில் உற்பத்தி நடவடிக்கைகளில் 05 கைத்தொழிலாளர்கள் ஈடுபடுவதுடன் 07 கைத்தொழிலாளர்கள் கட்டிட நிர்மாண நடவடிக்கைகளை மேற்கொள்கின்றனர். மூன்று கைத்தொழிலாளர்களுக்கு ஒதுக்கப்பட்டிருந்த 340.8 பேர்ச் அளவான மொத்த காணி அளவில் எந்தவொரு நிர்மாண நடவடிக்கைகளும் ஆரம்பிக்கப்படாமையின் காரணமாக விளைவற்றுக் காணப்பட்டது. | அவதானிக்கப்பட்ட திகதி வரையில் உற்பத்தி நடவடிக்கைகளை மேற்கொள்கின்ற 04 கைத்தொழில் நிறுவனங்கள் காணப்பட்ட போதும் தற்போது உற்பத்தி நடவடிக்கைகளை மேற்கொள்கின்ற 05 நிறுவனங்கள் காணப்படுகின்றமையும் அவதானிக்கப்பட்ட திகதி வரையில் நிர்மாணம் நடவடிக்கைகளை மேற்கொள்கின்ற நிறுவனங்களின் எண்ணிக்கை 04 ஆகக் காணப்பட்ட போதும் 2023 மே மாதம் வரையில் அந்த நிறுவனங்களின் 07 ஆக இருந்தமையும், எந்தவொரு அபிவிருத்தி நடவடிக்கைகளும் ஆரம்பிக்காதிருந்த கைத்தொழிலாளர்கள் தொடர்பாக எதிர்காலத்தில் நடாத்துவதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள பிரதேச கைத்தொழில் சேவைக் கூட்டத்திற்கு சமர்ப்பித்து பரிந்துரையைப் பெற்று அதன் பிரகாரம் செயற்திட்டம் தொடர்பான இறுதித் தீர்மானம் எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கைத்தொழிலாளர்களினால் கைத்தொழில்களை நிர்மாணிக்கும் நடவடிக்கைகள் மற்றும் வேலை ஆரம்பித்தல் தொடர்பாக வழங்கப்படுகின்ற வேலைத் திட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படுகின்றதா என்பது தொடர்பாக அமைச்சு தொடர்ந்தும் கவனம் செலுத்துதல் வேண்டும். |

## 3.3 எதிர்பார்க்கப்பட்ட நலன்கள் பெற்றுக்கொள்ளப்படாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2007 ஒக்டோபர் 10 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் மத்துகம கைத்தொழில் பேட்டையில் 1500 நேர் ஊழியம் அளவில் உருவாக்குவதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்த போதிலும் 16 கைத்தொழில்களில் இருந்து 388 தொழில்வாய்ப்புக்கள் மாத்திரம் உருவாக்கப்பட்டிருந்தது. | 2019 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின்னர் 2020 ஆம் ஆண்டில் இடம்பெற்ற கொரோனா தொற்று நோய் நிலைமை, 03 வருட அளவிலான காலத்தில் இருந்து நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி, அரசாங்கத்தினால் எரிபொருள் வரையறுத்தமை, பொருட்களின் கணிசமான அளவு இந்த நாட்டிற்கு கொண்டு வருவதை கட்டுப்படுத்தியமை, அமெரிக்க டொலரின் பெறுமதி உயர்வடைந்தமை, மின்வெட்டு மற்றும் மின் கட்டணங்கள் உயர்வடைந்து சென்றமையின் காரணமாக தொழிற்சாலைகளின் உற்பத்தி நடவடிக்கைகளை தொடர்ச்சியாக நடாத்திச் முடியாமையின் காரணமாக அமைச்சு எதிர்பார்த்த மட்டத்தில் வேலைவாய்ப்பு சந்தர்ப்பங்பளை உருவாக்குவதற்கு மத்துகம கைத்தொழில் பேட்டையின் கைத்தொழிலாளர்களுக்கு முடியாதிருந்தது. | கைத்தொழிலாளர்களினால் செயற்திட்ட முன்மொழிவுகள் சமர்ப்பிக்கும் போது உருவாக்குவதற்கு எதிர்பார்க்கப்பட்ட தொழில்வாய்ப்பனை அடைந்து கொள்வதற்கு கைத்தொழிலாளர்கள் தொடர்புபடுத்தப்படல் வேண்டும். |
| (ஆ) | பட்டஅத்த கைத்தொழில் பேட்டையில் அம்பாந்தோட்டை மாவட்டத்தில் 105 ஏக்கர் காணி அளவில் ரூபா 330.93 மில்லியன் செலவினை செய்து கைத்தொழில்களை ஆரம்பிப்பதற்காக கைத்தொழில் பேட்டையாக அபிவிருத்தி செய்து 1999 ஆம் ஆண்டின் போது நிர்மாணிக்கப்பட்டி ருந்தது. எனினும் இந்த | 105 ஏக்கரை உடைய பட்டஅத்த கைத்தொழில் பேட்டை 1999 ஆம் ஆண்டின் போது கைத்தொழில் நிலையமொன்றை ஸ்தாபிக்கும் நோக்கில் நிர்மாண நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டி ருந்ததுடன் 2005 ஆம் ஆண்டு இறுதிவரையில் உட்கட்டமைப்பு வசதிகள் நிர்மாண நடவடிக்கைகளில் 80 சதவீதம் அளவில் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. அதுவரையில் கைத்தொழில் பேட்டையின் கழிவு நீர் கடலுக்கு அகற்றும் குழாய்நீர் முறைமையை நிர்மாணித்தல் மேற்கொள்ளப்படுவதுடன் அந்தப் | கைத்தொழில்களுக்காக ஒதுக்குவதற்கு உத்தேசிக்கப்பட்ட மற்றும் விளைவற்றுக் காணப்படுகின்ற காணி அளவுகளில் பொருத்தமான முதலீட்டாளர்களைத் தெரிவு செய்து விரைவாக வழங்கி உரிய நிலத்தினைப் பயன்படுத்துவதற்கு |

| | | |
|---|---|---|
| கைத்தொழில் பேட்டையில் அகற்றப்படுகின்ற கழிவுப் பொருட்களை கடலில் போடுவதற்கு முன்மொழியப்பட்டதன் காரணமாக கைத்தொழில் பேட்டைக்கு அருகில் உள்ள மீனவர்களின் எதிர்ப்பினால் கைத்தொழில் பேட்டையின் நிர்மாண நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டிருந்தது. மேற்கூறப்பட்ட 105 ஏக்கர் காணி தொடர்பாக மீண்டும் 2006 பெப்ரவரி 15 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் 15 கைத்தொழிலாளர்களுக்காக 45.625 ஏக்கர் மற்றும் பொது நடவடிக்கைகளுக்காக 8.72 ஏக்கர் ஒதுக்கப்பட்டிருந்ததுடன் 25 ஏக்கர்கள் 09 கைத்தொழிலாளர்களுக்கு வழங்குவதற்கு முன்மொழியப்பட்டிருந்தது. அதன் காரணமாக 25.655 ஏக்கர் ஆன காணி அளவு விளைவற்றுக் காணப்பட்டது. | பணிகளுக்காக கைத்தொழில் பேட்டைக்கு அருகில் உள்ள மீனவர்களின் எதிர்ப்பினைப் போன்ற பிரதேச அரசியல் வாதிகளின் அச்சுறுத்தல்களின் காரணமாக அந்த நிர்மாண நடவடிக்கைகளை நிறுத்த வேண்டி ஏற்பட்டிருந்தது. பிரதேசப் பணிப்பாளர் (தென் மாகாணம்) இனால் அறிவிக்கப்பட்ட பிரகாரம் தற்போது வட்டஅத்த கைத்தொழில் பேட்டையில் 15 கைத்தொழிலாளர்களுக்கு 45.625 ஏக்கர் காணி ஒதுக்கப்பட்டிருந்தமையும் 25 ஏக்கர் காணி கைத்தொழில்களுக்காக உத்தேசிக்கப்பட்டிருந்தமையும் பொது நடவடிக்கைகளுக்காக ஒதுக்கப்பட்ட நில அளவு 8.72 ஏக்கராக இருந்தமையும் மிகுதி நில அளவு 24.65 ஏக்கர் ஆகும். | நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அமைச்சுக்குச் சொந்தமான ஓட்ட நிலைமையில் காணப்படாத 02 வாகனங்கள் மற்றும் ரூபா 4.5 மில்லியன் கிரயமான ஒரு வாகனம் என்பன 2022 நவம்பர் 04 ஆம் திகதிய பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சிற்கு | பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சினால் வாகனங்களை கையேற்குமாறு கோரி கையளித்தல் பத்திரத்தில் உரிய பகுதி பூர்த்தி செய்யப்பட்டு இந்த அமைச்சிற்கு அனுப்பியதன் பின்னர் அந்த ஆவணங்கள் கையொப்பமிட்டு கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். ஏனைய வாகனங்கள் கடிதம் மூலம் பெருந்தோட்டக் | விரைவாக பழுதுபார்ப்பதற்கு அனுப்ப வேண்டியிருந்ததுடன் விற்றுத் தீர்க்கப்பட வேண்டிய நிலையில் உள்ள வாகனங்களை அகற்றுவதற்கு |

| | | | |
|---|---|---|---|
| | வழங்கப்பட்டிருந்த போதிலும் அந்த வாகனங்களுக்குரிய சரியான பிரகாரம் உரித்தை கையளிக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அமைச்சு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | கைத்தொழில் அமைச்சிற்கு கையளிக்கப்பட்டுள்ளதுடன் மாற்றுவதற்குரிய ஆவணங்கள் தயாரிக்கப்படுகின்றது. இந்த வாகனம் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சினால் மக்கள் தோட்ட அபிவிருத்தி சபைக்கு கையளிக்கப்பட்டமையால் இது தொடர்பாக பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சில் இருந்து விசாரணை செய்தல் பொருத்தமானதாகும். | நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 01 இற்கும் 04 வருடங்களுக்கும் இடையிலான கால வீச்சில் இருந்து பழுதுபார்ப்பதற்காக தனியார் கராஜிகளுக்கு அனுப்பப்பட்டிருந்த 03 வாகனங்கள் பழுதுபார்த்தல் மேற்கொண்டு ஓட்டத்தில் சேர்க்கப்பட்டிருக்கவில்லை. இவ்வாறு நிறுத்திவைக்கப்பட்டிருந்த ஒரு வாகனம் தொடர்பாக ரூபா 621,900 மேலதிக நிதிக்கான பொறுப்புக்கு கடப்படுவதற்கு அமைச்சிற்கு ஏற்பட்டிருந்தது. | இந்த வாகனத்தின் இழப்பீட்டை பழுதுபார்ப்பதற்காக காப்புறுதி இழப்பீடு அங்கீகரிக்கப்படவில்லை. அதனால் இதற்காக பொறுப்பு வாய்ந்த தரப்பினரான இலங்கை சீமெந்து கம்பனியின் முன்னாள் தலைவரிடம் இருந்து இழப்பீட்டு மீளளிப்பைச் செய்வதற்காக கொள்ளுப்பிட்டி பொலிஸின் மூலம் வழக்குத் தொடரப்பட்டிருந்த போதிலும் பொலிஸினால் இந்த அமைச்சில் இருந்து தகவல்கள் பெறப்படாமல் மின்சக்தி அமைச்சில் இருந்து தகவல்கள் பெற்று வழக்கு முடிவுறுத்தப்பட்டிருந்தது. அதனால் மீண்டும் வழக்கை ஆரம்பிக்குமாறு பொலிஸிற்கு அறிவிக்கப்பட்டிருந்தது. கணிசமான இழப்பீடாக இருந்தமையால் நட்டத்தை அறவிடும் வரை அதிகமான தொகை செலுத்தி அமைச்சின் மூலம் பழுதுபார்த்தல் மேற்கொள்ளல் தொடர்பாக தீர்மானம் எடுப்பதற்காக பொறியியலாளர் அறிக்கை ஒன்றையும் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.<br><br>2021 ஆம் ஆண்டில் ஊவா பிரதேச அலுவலகத்தில் பிரதேச பணிப்பாளர் வருகைதராமையினால் மற்றும் வாகனம் ஓட்ட நிலைமையில் காணப்பட்டமையும் மற்றும் முன்னுரிமை வழங்க வேண்டிய பழுதுபார்த்தல் களுடன் உள்ள வாகனங்கள் காணப்பட்டமையால் | விரைவாக பழுதுபார்த்தல் நடவடிக்கைகளை பூர்த்தி செய்து ஓட்டத்தில் சேர்த்துக் கொள்வதற்கும் இழப்பீடு தொடர்பாக உரிய தரப்பினரிடமிருந்து அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | இந்த பழுதுபார்த்தலுக்கு முன்னுரிமை குறைவாக இருந்தது.<br><br>பழுதுபார்க்கக்கூடிய நிலைமையில் உள்ள வாகனங்களை கையேற்று ரூபா 4,500,000.00 செலுத்துவதற்கு காப்புறுதிக் கம்பனி திடீர் விபத்துக்கள் ஏற்பட்டு ஒரு வருடத்திற்கு மேற்பட்ட காலம் கடந்தமையின் பின்னரே இது தொடர்பாக மேலதிகமான விசாரணைகளுக்காக மேலதிகச் செயலாளர் (நிர்வாகம்) இன் தலைமையில குழுவொன்று நியமிப்பதற்கு இணக்கம் தெரிவிக்கப்பட்டிருந்தது. | |
| (இ) | அமைச்சரின் இணைப்புச் செயலாளரால் பயன்படுத்தப்பட்ட வாகனமொன்று 2022 மே 09 ஆம் திகதி விபத்துக்கு உட்பட்டிருந்ததுடன் பழுதுபார்ப்பதற்காக அதன் முகவராண்மை நிறுவனத்தால் ரூபா 7,507,726 மதிப்பீடொன்று சமர்ப்பிக்கப்பட்ட போதும் காப்புறுதி நிறுவனத்தால் ரூபா 2,600,000 தொகை மாத்திரம் இழப்பீடாக அங்கீகரிக்கப்பட்டிருந்தது. 2022 யூலை மாதம் 21 ஆம் திகதி முதல் எந்தவொரு பழுதுபார்த்தலும் மேற்கொள்ளப்படாமல் இந்த வாகனம் முகவராண்மை நிறுவனத்தில் நிறுத்திவைக்கப்பட்டிருந்தது. | முன்னாள் இருந்த அமைச்சரின் செயலாளரின் சேவைக்காலம் முடிவடைந்த பின்னர் அந்த வாகனம் அமைச்சுக்கு கையளிக்குமாறு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டிருந்தது. இந்த வாகனம் அமைச்சுக்கு கையளிப்பதற்கு முன் திடீர் விபத்துக்கு உட்படடிருந்தது. காப்புறுதி இழப்பீட்டுப் பணம் மற்றும் மதிப்பீடு செய்யப்பட்ட தொகைகளுக்கும் இடையே கனிசமான வேறுபாடு காணப்படுகின்றமையால் அதிக தொகை அறவிட்டு அறவிட வேண்டிய பொறுப்பு வாய்ந்த நபர் தொடர்பாக குழு அறிக்கை கிடைக்கும் வரை பழுதுபார்த்தல் தாமதிக்கப்பட்டிருந்தது. இந்த வாகனத்தின் நட்ட இழப்பு தொடர்பாக நிதிப்பிரமாணம் 104 இன் பரிசோதனைக்காக குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதுடன் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுகின்றது. | விரைவாக பழுதுபார்த்தல்களை மேற்கொண்டு ஓட்டத்தில் ஈடுபடுத்த வேண்டியிருந்ததுடன் நட்டத்தை பொறுப்பு வாய்ந்த தரப்பினரிடமிருந்து அறவிடல் வேண்டும். |

### 3.5 நட்டம் மற்றும் இழப்புக்கள்.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பத்திக் கைத்தறி துணி மற்றும் உள்நாட்டு புடவை உற்பத்தி இராஜாங்க அமைச்சரின் பாதுகாப்பு உத்தியோகபூர்வ வாகனமாக பயன்படுத்தப்பட்ட வாகனம் 2021 சனவரி 13 ஆம் திகதி ஏற்பட்ட திடீர் விபத்தினால் இழப்புக்கு உட்பட்டிருந்தமையால் அந்த சந்தர்ப்பத்தில் சாரதியால் விபத்து தொடர்பாக காப்புறுதி நிறுவனம் மற்றும் பொலிஸிக்கு அறிவிக்கப்பட்டிருக்க வில்லை. காப்புறுதி இழப்பீடு செலுத்துதல் காப்புறுதி நிறுவனத்தால் நிராகரிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ரூபா 1,323,900 ஆன வாகன பழுதுபார்ததல் செலவினத்தை காப்புறுதி இழப்பீடுகளில் இருந்து கிடைத்த ரூபா 200,000 கழிக்கப்பட்டதன் பின்னர் எஞ்சிய தெகையான ரூபா 1,123,900 அமைச்சினால் செலுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் இந்த வாகன விபத்துத் தொடர்பாக ஏற்பட்ட ரூபா 1,123,900 நட்டத்தை பொறுப்புவாய்ந்த தரப்பினரிடமிருந்து அறவிடப்பட்டிருக்கவில்லை. | ஆடை கைஇயந்திரம் புடவை மற்றும் உள்நாட்டு புடவை உற்பத்தி இராஜாங்க அமைச்சரின் பாதுகாப்பு உத்தியோகபூர்வ வாகனமக பயனபடுத்தப்பட்ட இந்த வாகனத்திற்கு ஏற்பட்ட நட்டம் அதற்குரிய பொறுப்பு வாய்ந்த தரப்பினரான அந்த வாகனத்தின் சாரதியிடமிருந்து அறவிடுவதற்காக சட்டரீதியான நடவடிக்கை தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது. | விபத்து ஏற்பட்டவுடன் அது தொடர்பாக உரிய தரப்பினருக்கு அறவித்தல் தொடர்பாக சாரதிகளுக்கு தொடர்ச்சியாக ஆலோசனை வழங்க வேண்டியிருந்ததுடன் நட்டத்தை பொறுப்பு வாய்ந்த தரப்பினரிடமிருந்து அறவிடல் வேண்டும். |

### 3.6 முகாமைத்துவ நலிவுகள்.

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மேல் மாகாணத்தில் அமைந்துள்ள 05 கைத்தொழில் பேட்டைகளில் 07 தொழிற்சாலைகளில் எந்தவொரு உற்பத்தி நடவடிக்கையும் | மேல் மாகாணத்தில் அமுல்படுத்தப்பட்ட கைத்தொழில்களில் உற்பத்தி நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்படாத 07 தொழிற்சாலைகள் 05 | உற்பத்தி நடவடிக்கைகளில் மேற்கொள்ளாத கைத்தொழிலாளர்கள் தொடர்பாக பொருத்தமான |

| | | | |
|---|---|---|---|
| | மேற்கெள்ளாமல் மூடப்பட்டதன் காரணமாக 1,535.7 பேர்ச் அளவான காணி அளவொன்று பயன்படுத்தப்படாமல் காணப்பட்டதுடன் மேற்கூறுப்பட்ட 05 கைத்தொழில் பேட்டைகளையும் உள்ளடக்கிய 07 கைத்தொழில் பேட்டைகளில் 57 தொழிற்சாலைகள் தமது உற்பத்தி நடவடிக்கைகளில் எதிர்பார்த்த மட்டத்தினை விட குறைந்த இயலளவில் நடாத்தி செல்லப்பட்டிருந்தது. | கைத்தொழில்பேட்டைகளில் காணப்படுகின்றமையும் மேலும் அனேகமான கைத்தொழில்கள் நாட்டில் காணப்படுகின்ற பொருளாதார நெருக்கடியின் அடிப்படையில் இறக்குமதி வரையறுக்கப்பட்டமை மற்றும் கிடைக்கின்ற கட்டளையின் பிரகாரம் உற்பத்தி நடவடிக்கைகளை தொடர்ச்சியான முறையின் கீழ் மேற்கொள்ளப்படுகின்றது. | நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்ததுடன் தற்போது காணப்படுகின்ற கைத் தொழில் பேட்டைகளில் உற்பமத்தி நடவடிக்கைகைளை செய்கின்ற போது கைத்தொழிலாளர்கள் முகம் கொடுக்கின்ற பிரச்சினைகள் தொடர்பாக அமைச்சு கவனம் செலுத்துதல் வேண்டும். |
| (ஆ) | கைத்தொழிலானர்களுக்கு காணி ஒதுக்கீடு செய்யும் போது விநியோகிப்படுகின்ற காணி ஒதுக்கீட்டுக் கடிதத்தின் பிரகாரம் அந்தக் காணி ஒதுக்கீடு செய்யப்டதன் பின்னர் 35 வருட நீண்ட கால வாடகை உடன்படிக்கை கைச்சாத்திடப்பட வேண்டியிருந்த போதிலும் 33 கைத்தொழில் பேட்டைகளில் உலப்பனை கைத்தொழில் பேட்டை, நாளந்த (மாத்தளை) கைத்தொழில் பேட்டை மற்றும் மேல்மாகாணத்தில் அமைந்துள்ள 08 கைத்தொழில் பேட்டைகளும் ஆக 10 கைத்தொழில் பேட்டைகளுக்குரியதாக வழங்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் 91 கைத்தொழிலாளர்களுக்காக வாடகை உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை. | கைத்தொழில் பேட்டைகளில் வரும் காணி ஒதுக்கப்பட்டுள்ள, எனினும் வாடகை உடன்படிக்கை இன்னும் தயாரிக்கப்படாத முதலீட்டாளர்களுக்கு அந்தக் காணிக் கூறுகளுக்காக நீண்ட கால வாடகை உறுதி வழங்குதல் விரைவாக மேற்கொள்வதற்காக அமைச்சினால் கைத்தொழில் பேட்டை மட்டத்தில் நடமாடும் சேவையை நடாத்துதல் 2021 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளின் போது 07 நடமாடும் சேவைகள் நடாத்தப்பட்டிருந்தது. அதன் போது அந்தந்த முதலீட்டாளர்களினால் வாடகை உறுதி தயாரிக்கும் செயற்பாடுகள் மேற்கொள்ளவேண்டியிருந்த மிகுதி நடவடிக்கைகள் மற்றும் வழங்க வேண்டிய ஆவணங்கள் தொடர்பாக ஆலோசனை வழங்கப்பட்டிருந்தது. | கைத்தொழிலாளர்களுக்காக வாடகை உடன்படிக்கை கைச்சாத்திடும் நடவடிக்கைகளை துரிதப்படுத்துதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 03 கைத்தொழில் பேட்டைகளுக்குரிய 2022 திசெம்பர் 31 ஆம் திகதியிலுள்ளவாறு அறவிடவேண்டிய வாடகைப்பணம் ரூபா 79,155,035 ஆக இருந்த போதிலும் 2023 யூலை 19 ஆம் திகதி வரையிலும் அந்தப் பணம் அறவிடப்பட்டிருக்கவில்லை. மேலும் 19 கைத்தொழில் பேட்டைகளில் நிலுவையான வாடகைப்பணம் தொடர்பான தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமையினால் அந்த 19 கைத்தொழில் பேட்டைகளுக்குமுரிய நிலுவை வாடகைப் பணம் காணப்படுகின்றதா என பரீட்சிப்பதற்கு முடியாதிருந்தது. | 2023 ஆம் ஆண்டில் 14 கைத்தொழில் பேட்டைகளில் அறவிடப்பட்டிருந்து வாடகைப் பணம் தொடர்பாகவும், அவற்றில் செலுத்துவதற்கு எஞ்சியுள்ள வாடகைப் பணம் தொடர்பான விபரங்களின் பிரகாரம் முன்னைய ஆண்டுகளுக்குரிய நிலுவை வாடகைத் தொகையில் ரூபா 39,078,953 தொகை 2023 ஆம் ஆண்டின் போது அறவிடப்பட்டிருந்தது. | வாடகைப் பணம் உரிய பிரகாரம் தாமதமின்றி அறவிடுதல் தொடர்பாக அமைச்சு முன்னின்று செயற்படல் வேண்டும். |
| (ஈ) | 2022 ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத் திட்ட முன்மொழிவின் பிரகாரம் பிரதேச மட்டம் மற்றும் மாவட்ட மட்டத்தில் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழில் வலயங்களை ஸ்தாபித்தல் மற்றும் புதிய தொழில் முயற்சியாளர்களுக்காக புதிய தொழில் முயற்சிகளை அபிவிருத்தி செய்வதற்காக முதலீட்டு சந்தர்ப்பங்களை வழங்குதல் தேசிய செயற்றிட்டத்தின் கீழ் 10 கைத்தொழில் பேட்டைகளை இஸ்தாபிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டு 2022 ஆம் ஆண்டில் திருத்தப்பட்ட மதிப்பீட்டின் பிரகாரம் அதற்காக ரூபா 100 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்தது, உத்தேசிக்கப்பட்ட நிகழ்ச்சித் திட்டத்தின் வெல்லவாய கைத்தொழில் பேட்டையினை | இந்த புதிய செயற்றிட்டத்தின் கீழ் திட்டமிடப்பட்ட பிரகாரம் 10 கைத்தொழில் பேட்டைகளை ஸ்தாபிக்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்ருந்தது. அதன் போது புத்தளம் மாவட்டத்தில் இரணவில கைத்தொழில் பேட்டையை இஸ்தாபிப்பதற்காக இணங்காணப்பட்ட அமெரிக்கன் வடிவில் அமைந்துள்ள காணி அதற்காக விடுவித்தல் தொடர்பாக ஏற்பட்ட பிரச்சினையான நிலைமையின் காரணமாக அதற்குப் பதிலாக மொனறாகலை மாவட்டத்தில் வெள்ளவாய கைத்தொழில் பேட்டையை ஸ்தாபிப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. கைத்தொழில் பேட்டையை ஸ்தாபிக்கும் போது அதன் உற்கட்டமைப்பு வசதிகள் (வேலி, வாயிற்கதவு, வீதிகள், நீர் மற்றும் மின்சாரம்) வழங்குவதற்கு முன்னர் காணியைச் சுற்றி அளவிடல், துப்பரவாக்குதல், காணி கூறிடப்பட்டு | கைத்தொழில் பேட்டைகளை இஸ்தாபிக்கும் போது உரிய திட்டமுறைமையின் பிரகாரம் சாத்தியவள ஆய்வினை மேற்கொண்டு காணி தெரிவுசெய்யப்படல் வேண்டும். |

நிர்மானிப்பதற்கு மதிப்பீடு செய்யப்படாதிருந்த போதிலும் வெல்லவாய கைத்தொழில் பேட்டையின் காணியை கூறுகளாக்குதல் மற்றும் வேலி மற்றும் வாயிற் கதவுகளை நிர்மானிப்பதற்காக 2022 ஆம் ஆண்டின் போது ரூபா 8,288,173 செலவினம் செய்யப்பட்டிருந்தது.

மொனராகலை மாவட்டத்தில் புத்தள கைத்தொழில் பேட்டை தற்போது ஸ்தாபிக்கப்பட்டிருந்தமை, அந்த கைத்தொழில் பேட்டையின் காணி ஒதுக்கி வழங்கப்பட்ட 17 கைத்தொழிலாளர்கள் தற்போது 05 கைத்தொழிலாளர்கள் மாத்திரம் வெற்றிகரமாக உற்பத்தி நடவடிக்கைகளை மேற்கொள்கின்றமை, வெல்லவாய பிரதேசத்தில் மேலுமொரு கைத்தொழில் பேட்டையை நிர்மானிப்பதற்கு பதிலாக புத்தளயில் தற்போது நிர்மானிக்கப்படுகின்ற கைத்தொழில் பேட்டையை அபிவிருத்தி செய்து கைத்தொழிலாளர்களை கட்டியெழுப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல் பொருத்தமாக இருந்தமை என்பன அவதானிக்கப்பட்டது.

உள்ளக வீதிகள் காணியில் அமைக்கப்படுதல் போன்ற ஆரம்பப் பணிகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். 10 கைத்தொழில் பேட்டைகளுக்காக தெரிவுசெய்யப்பட்ட 10 காணிகளில் மேற்கூறப்பட்ட அடிப்படையில் பணிகள், உரிய நிறுவனங்களுடன் இணைப்பினை ஏற்படுத்தி 2022 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டிருந்தது, புத்தள கைத்தொழில் பேட்டையில் கைத்தொழில்களை ஆரம்பிப்பதற்கு காணப்படுகின்ற வெற்றுக் காணி எண்ணிக்கைகள் மிகவும் வரையறுக்கப்பட்டதாக இருந்தமையால் மொனறாகலை மாவட்டத்தில் புதிய கைத்தொழில் பேட்டையொன்றை ஸ்தாபிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது,

4. மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அமைச்சில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 668 ஆக இருந்ததுடன் உள்ளபடியான பதவியணியினர் 660 ஆகும். அதன் பிரகாரம் வெற்றிடங்கள் 77 உம் மிக 69 உம் அவதானிக்கப்பட்டது. அதாவது சிரேஷ்ட, மூன்றாம், இரண்டாம் மற்றும் ஆரம்ப நிலைகளில் முறையே 12, 02, 42 மற்றும் 21 ஆக வெற்றிடயங்கள் காணப்பட்டதுடன் இரண்டாம் நிலையில் அமைச்சின் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் 44 பேர் மற்றும் தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரச சபையின் அபிவிருத்தி உத்தியோகத்தர்களில் 25 பேரும் மிகையாக இருந்தனர். | அமைச்சின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் இணைந்த சேவையில் சிரேஷ்ட, மூன்றாம் மற்றும் ஆரம்ப நிலைகளின் பதவிகளில் காணப்படுகின்ற வெற்றிடமான பதவிகளுக்காக உத்தியோகத்தர்களை நியமிப்பதற்கு இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்திற்கு கடிதம் மூலம் கோரப்பட்டுள்ளது. அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவிவிகளின் மிகை 69 இற்காக அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடம் கோரிக்கை விடப்பட்டுள்ளது. | அமைச்சின் பணிப் பொறுப்புக்களின் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியை மாற்றுவதற்கும் மற்றும் அதன் பிரகாரம் ஏற்படுகின்ற வெற்றிடங்களை நிரப்புவதற்கும் மற்றும் மிகைகளை முறையான பிரகாரம் முறைமைப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |